## அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி – 2016

அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியின் ('வங்கி') 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1975 இன் 13 ஆம் இலக்க அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி அதிகாரச்சட்டத்தின் 65(2) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டன. நிதி அதிசாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் வங்கியின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான சபையின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை (''சபை'') பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வு சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் வங்கியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி வங்கியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்குதல் (எல்கேஏஎஸ் /எஸ்எல்எவ்ஆர்எஸ்)

எல்கேஏஎஸ் 08 – கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் பிழைகள் நியமத்தின் தேவைப்பாடுகளுடன் இணங்காது 2015 ஆம் ஆண்டிற்கு முன்னருடன் தொடர்புடைய பிழை திருத்தங்களாக குறித்துரைக்கப்பட்ட கட்டணங்களின் கணக்குகள் மீது பிடித்துவைத்தல் வரிக்கு வரவு மற்றும் செலவு பதிவுகளாக முறையே 124,707 மற்றும் 3,317,349 தொகைகள் வங்கி மேற்கொண்டிருந்தது.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை கணக்கீட்டு நியமங்களின் (எஸ்எல்எவ்ஆர்எஸ் மற்றும் எல்கேஏஎஸ்) பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட மீதிகளை பிரதிபலிப்பதற்காக பொது பேரேட்டு கணக்குகள் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. ஆகையினால், நிதிக்கூற்றுக்களின் தயாரித்தலிற்கான அறிக்கை காலப்பகுதிக்கு பின்னர் சரிப்படுத்தல்களாக பொது நாளேட்டிற்கு ரூபா 484,816,298 பெறுமதியான 19 பதிவுகளினை வங்கி பதிவிடவேண்டியிருந்தது.

(ஆ) 2016 சனவரி 01 இல் நிதிக்கூற்றுக்களில் கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்கொன்றாக ரூபா 8,614,361 தொகையொன்று காட்டப்பட்டது. மீளாய்வாண்டின் போது இந்த கணக்கிற்கு முறையே ரூபா 58,137,838 மற்றும் ரூபா 42,526,685 தொகையொனறு வரவு மற்றும் செலவு வைக்கப்பட்டிருந்தது என்றாலும், அதிகமான வரவு மற்றும் செலவு பதிவுகள் முன்னைய ஆண்டுகளுடன் தொடர்புடையாதாகக் காணப்படுகின்றது அவற்றிற்கு போதியளவான தகவல்கள் கிடைக்கக்கூடியதாக காணப்படவில்லை. அதற்கமைய நிதிக்கூற்றுக்களில் ஏனைய சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டுள்ள ரூபா 24,225,514 வரவு மீதியொன்றின் சரியான தன்மை மற்றும் அறவீடு சந்தேகத்திற்குரியதாகக் காணப்படுகின்றது.

(இ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தேறுகைக் கணக்கில் உறுதிப்படுத்தப்பட்டுக் காணப்படாத காசோலைகளில் ரூபா 12,407,870 அசாதாரண வரவு மீதியொன்று காணப்பட்டது. எனவே, நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ஏனைய கடன்பட்டோர்கள் அந்த தொகையினால் மிகையாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

(ஈ) முன்னைய ஆண்டுகள் மற்றும் 2016 ஆம் ஆண்டுடன் தொடர்புடைய வங்கி இணக்கக் கூற்றுக்களில் சரிப்படுத்தப்பட வேண்டிய ரூபா 5,020,135 கூட்டுத்தொகை தொடர்புடைய வங்கி இணக்கக் கூற்றில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை மற்றும் ஆகையினால், மீளாய்வாண்டிற்கு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட காசு மற்றும் காசுக்குச் சமமானவை சமமான தொகையினால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், ரூபா 168,317,332 ஆன பொருத்தமற்ற கடன் மீதி காணப்பட்டது. எவ்வாறாயினும், வயதுப் பகுப்பாய்வில் அது ரூபா 148,743,268 ஆகக் காட்டப்பட்டிருந்தது. எனவே, 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ஏனைய பொறுப்புக்கள் ரூபா 19,574,064 இனால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

### 2.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நான்கு கடன் வகைகளுடன் தொடர்புடைய கடன் பட்டியல்கள் மற்றும் பொது பேரேட்டில் காட்டப்பட்ட கடன் மீதிகளுக்கிடையே ரூபா 3,265,669 வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டதுடன் இந்த வித்தியாசத்திற்கு காரணம் கணக்காய்விற்கு விபரிக்கப்படவில்லை. மேலும், நிதிக்கூற்றுக்களின் படி கடன்களின் பெறுமதிக்கும் நட்டக்கழிவினை கருத்திற்கொண்ட மற்றும் கருத்திற்கொள்ளாத மொத்தக் கடன்களின் பெறுமதிக்குமிடையில் (கடன்களை ஒன்று சேர்த்ததன் பின்னர்) ரூபா 1,382,385 வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கஞ் செய்யப்பட்டிராத உள்ளக கிளை கணக்குகளிடயே ரூபா 2,856,831 வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது.

(இ) நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட செலுத்த வேண்டிய ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதி 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அனுப்பும் படிவங்களில் காட்டப்பட்ட தொகைகளுக்கிடையே ரூபா 2,213,095 வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது.

(ஈ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 1,729,042 ஆன நேரொத்த தொகையுடன் நிதிக்கூற்றுக்களுக்கான பட்டியல்படுத்தல்களில் ஊழியர் பாதுகாப்பு வைப்பாக காட்டப்பட்ட ரூபா 1,587,771 தொகையொன்றுடன் வித்தியாசம் காணப்பட்டமையினால் கணக்காய்வில் ரூபா 141,271 விளக்கமளிக்கப்படாத வித்தியாசமொன்று கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(உ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வைப்புக்கள் தொடர்பில் கணனிமயப்படுத்தப்பட்ட முறைமையினால் உருவாக்கப்பட்ட மீதிகள் மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கிடையே ரூபா 539,171 வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது.

(ஊ) வங்கியினால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டு முறைமையின் பிரகாரம், கிளை ஆலோசனைக் கணக்கு மற்றும் உரிமை கொண்டாடும் உறுதிச்சீட்டு கணக்குகளில் முறையே செலவு மீதியொன்றும் மற்றும் வரவு மீதியொன்றும் தோற்றமளிக்க வேண்டுமாயினும், 2016 திசெம்பர் 31 இல் உள்ளபடியான இந்த கணக்குகளில் முறையே ரூபா 6,571,060 மற்றும் ரூபா 17,592,805 ஆன அசாதாரணதொரு வரவு மற்றும் செலவு மீதிகள் அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், அதற்கான காரணங்கள் கணக்காய்விற்கு விபரிக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) வரி விளைவாக நிதிக்கூற்றுக்களில் ரூபா 27,884,783 தொகையொன்று தோன்றியிருந்த போதிலும், கணக்காய்விற்கு வழங்கப்பட்ட பட்டியல்களின் படி அது ரூபா 493,558 ஆகக் காணப்பட்டது. 2016 திசெம்பர் 31 இல் உள்ளபடியான நிதிக்கூற்றுக்களில் ரூபா 27,391,225 இன் வித்தியாசம் சரிசெய்யப்பட்டிருக்கவில்லை.

**2.2.4. கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

கணக்காய்விற்கு விபரமான பட்டியல்கள், உறுதிப்படுத்தல்கள் மற்றும் ஏனைய தேவையான விபரங்கள் சமர்ப்பிக்கப்படாமையின் காரணமாக மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான ஏனைய கடன்பட்டோர்களின் கீழ் மோசடிக்கணக்காக காட்டப்பட்ட ரூபா 2,400,000 தொகையொன்றினை கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

**2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இரண்டு வருடங்களுக்கு மேற்பட்டதாக நிதிக்கூற்றுக்களில் முற்பணமாக பெற்றதாக ரூபா 1,389,087 தொகையொன்று காட்டப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மீளாய்வாண்டின் இறுதி வரையேனும் இந்த மீதிகள் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இரண்டு வருடங்களுக்கு மேலாக அறவிடப்படாது ரூபா 2,121,389 கூட்டுத்தொகையான பின்வரும் கணக்கு மீதிகள் மீதி கீழ்க்கொண்டு வரப்பட்டிருந்தது. எனவே, இந்த மீதிகளின் அறவிடுகை சந்தேகத்திற்குரியதாகக் காணப்படுகின்றது.

| கணக்கின் பெயர் | தொகை<br>ரூபா. |
| --- | --- |
| அறவிடவேண்டிய நிலையான வைப்பு கடன் | 418,635 |
| தேசிய பாதுகாப்பு தீர்வை | 785,954 |
| முற்பணமாக செலுத்தப்பட்ட வட்டி – அஸ்சார்யா | 916,800 |
| மொத்தம் | 2,121,389 |

(இ) முற்பணக் கணக்குகளில் காட்டப்பட்ட ரூபா 7,197,693 வரவு மீதிகளில், 2015 ஆம் ஆண்டுடன் தொடர்புடைய ரூபா 5,376,153 தொகையொன்று இனங்காணப்பட்டிருக்காததுடன் கணக்குகளில் சரிசெய்யப்பட்டது. எனவே, இந்த மீதிகளின் நம்பகத்தன்மை மற்றும் அறவிடக்கூடிய தன்மை கணக்காய்வில் அறிந்து கொள்ள முடியாதிருந்தது.

(ஈ) சேமலாப நிதி கணக்கிற்கு சேர்ந்த உதவியாக ரூபா 1,518,610 வரவு மீதியொன்று ஏனைய கடன்பட்டோர்களின் கீழ் காட்டப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. உரிய தரப்பினர்களினால் இந்த மீதி உறுதிப்படுத்தப்படாமையினால், இந்த மீதியின் அறவிடக்கூடிய தன்மை சந்தேகத்திற்குரியதாகக் காணப்படுகின்றது.

(உ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளபடியான நிதிக்கூற்றுக்களில் ஏனைய கடன்பட்டோர்களின் கீழ் தொங்கல் தன்மையாக ரூபா 799,884 தொகையொன்று காட்டப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அவற்றின் காரணங்கள் மற்றும் விபரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான வங்கியின் செயற்பாடுகள் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான ரூபா 681 மில்லியன் வரிக்கு முன்னரான தேறிய இலாபத்துடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் ரூபா 706 மில்லியன் வரிக்கு முன்னரான தேறிய இலாபத்தை விளைவித்திருந்தமையால், நிதிசார் விளைவுகளில் ரூபா 25 மில்லியன் அல்லது 4 சதவீத முன்னேற்றமொன்றைக் காட்டுகின்றது.

முன்னைய ஆண்டின் தொடர்புடைய தொகைகளுடன் ஒப்பிடும் போது வட்டி வருமானம் 9.3 சதவீதத்தினால் அதிகரித்தமை மற்றும் ஆண்டிற்கான நட்டக்கழிவு 67 சதவீதத்தினால் குறைவடைந்தமை என்பன இந்த முன்னேற்றத்திற்கு பிரதான காரணங்களாக பங்களித்திருந்தன.

### 3.2 பெறுமதி சேர்க்கை

மீளாய்வாண்டிற்கான ரூபா 1,226,236,833 கூட்டுத்தொகையான தனிநபர் ஊதியம், பெறுமானத்தேய்வு மற்றும் அரசிற்கு செலுத்த வேண்டிய வரியினை கருத்திற்கொண்ட பின்னர் 2013 ஆம் ஆண்டில் ரூபா 933,770,458 இலிருந்து 2016 ஆம் ஆண்டிற்கு ரூபா 1,662,254,618 ஆக வங்கியின் பெறுமதி சேர்க்கை தொடர்ச்சியாக அதிகரித்திருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான வங்கியின் நிதிசார் விளைவுகள் ரூபா 436,017,785 ஆகக் காணப்பட்ட போதிலும், முன்னைய ஆண்டிற்கு எதிராக வங்கியின் மொத்த பெறுமதி சேர்க்கை ரூபா 86,232,972 அல்லது 5.5 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

### 3.3 பகுப்பாய்வு ரீதியான நிதிசார் மீளாய்வு

#### 3.3.1 இலாபத்தன்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2011 தொடக்கம் 2016 காலப்பகுதியின் போது வட்டி வருமானம் ரூபா 2,611 மில்லியனிலிருந்து ரூபா 4,241 மில்லியன் அல்லது 62.4 சதவீதத்தினால் அதிகரித்திருந்த அதேவேளை, 2011 தொடக்கம் 2016 வரை வட்டிச் செலவினம் ரூபா 1,214 மில்லியனிலிருந்து ரூபா 2,425 அல்லது 99 சதவீதத்தினால் வட்டிச் செலவினங்கள் கூட அதிகரித்திருந்தது. அதற்கமைய 2011 இல் 53.5 சதவீதத்திலிருந்து 2016 இல் 42.8 சதவீதமாக தேறிய வட்டி வருமானம் 11 சதவீதத்தினால் கைவிடப்பட்டிருந்தது.

(ii) 2011 – 2016 காலப்பகுதியின் போது ரூபா 510 மில்லியனிலிருந்து ரூபா 436 மில்லியன் அல்லது 14.5 சதவீதத்தினால் வரிக்கு பின்னரான தேறிய இலாபம் குறைவடைந்திருந்தது. எவ்வாறாயினும், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் அது ரூபா 409 மில்லியினிலிருந்து ரூபா 436 மில்லியன் அல்லது 6.6 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

#### 3.3.2 முக்கியமான கணக்கீட்டு விகிதங்கள்

கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 02 ஆண்டுகளிற்கான வங்கியின் சில முக்கியமான கணக்கீட்டு விகிதங்கள் மற்றும் துறை விகிதங்கள் ஒப்பீடுசெய்யப்பட்டு கீழே தரப்படுகின்றன.

| | | வங்கி | | துறைசார் விகிதங்கள் (உரிமம் பெற்ற விஷேட வங்கிகள்) | |
|---|---|---|---|---|---|
| | | **2016** சதவீதம் | **2015** சதவீதம் | **2016** சதவீதம் | **2015** சதவீதம் |
| **இலாபத்தன்மை விகிதங்கள்** | | | | | |
| i. | தேறிய வட்டி எல்லை | 5.36 | 5.81 | 3.5 | 3.8 |
| ii | உரிமை மூலதனம் மீதான திரும்பல் | 9.50 | 9.90 | 18.3 | 20.3 |
| iii | சொத்துக்கள் மீதான திரும்பல் | 2.03 | 2.11 | 1.5 | 1.6 |
| iv. | செயற்பாட்டு செலவினங்களுக்கான பதவியணியின் கிரயம் | 20.27 | 22.14 | 51.1 | 52.1 |
| **போதிய மூலதன விகிதங்கள்** | | | | | |
| | தட்டு I | 22.96 | 22.17 | 13.5 | 16.6 |
| **திரவ விகிதங்கள்** | | | | | |
| i. | திரவச் சொத்துக்கள் / வைப்புக்கள் | 22.82 | 23.64 | 61 | 67.2 |

உரிமம் பெற்ற விஷேட வங்கி துறையினை விட தேறிய வட்டி எல்லை 1.86 சதவீதத்தினால் உயர்வாக இருந்த பொதிலும், உரிமை மூலதனத்தின் மீதான திரும்பல் திருப்திகரமான மட்டத்தில் காணப்படாததுடன் அது 8.8 சதவீதத்தினால் துறைசார் விகிதத்துடன் பின்னடைந்து காணப்பட்டது. மேலும், 2015 மற்றும் 2016 ஆகிய இரண்டு ஆண்டுகளில் துறைசார் விகிதத்துடன் ஒப்பிடுகையில் வங்கியின் திரவத்தன்மை காட்ட தொலைவான தாழ்மட்டத்தில் காணப்பட்டது.

### 3.3.3 வங்கியின் சந்தைப் பங்கு

வங்கித்துறை (பீஎஸ்) மற்றும் உரிமம் பெற்ற விஷேட வங்கி துறையுடன் (எல்எஸ்பீஎஸ்) மொத்த வைப்புக்கள் மற்றும் மொத்த சொத்துக்களின் அடிப்படையில் ஒப்பீடு செய்யப்பட்டு, வங்கியின் சந்தைப் பங்கு கீழே தரப்படுகின்றன.

| ஆண்டு | வைப்பு அடிப்படையில் சந்தைப்பங்கு சதவீதமாக | | சொத்து அடிப்படையில் சந்தைப்பங்கு சதவீதமாக | |
|---|---|---|---|---|
| | பீஎஸ் | எஸ்எல்பீஎஸ் | பீஎஸ் | எல்எஸ்பீஎஸ் |
| **2016** | 0.46 | 3.41 | 0.39 | 2.94 |
| **2015** | 0.52 | 3.64 | 0.42 | 3.10 |
| **2014** | 0.52 | 3.40 | 0.43 | 2.79 |
| **2013** | 0.51 | 3.43 | 0.45 | 2.91 |
| **2012** | 0.47 | 3.05 | 0.44 | 3.03 |
| **2011** | 0.49 | 2.94 | 0.48 | 3.04 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

2011 ஆம் ஆண்டிலிருந்து 2016 ஆம் ஆண்டு வரை எல்எஸ்பீஎஸ் உடன் ஒப்பிடுகையில் மொத்த வைப்புக்கள் அடிப்படையில் சந்தைப்பங்கு 0.47 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. எவ்வாறாயினும், 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது அது 0.23 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது. அதேநேரம், 2011 ஆண்டிலிருந்து 2016 வரையான காலப்பகுதியின் போது எல்எஸ்பீஎஸ் உடன் ஒப்பிடுகையில் மொத்த சொத்துக்கள் அடிப்படையில் வங்கியின் சந்தைப் பங்கு 0.10 சதவீதத்தினால் குறைவடைந்திருந்ததுடன் 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது அது 0.16 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 பிரதான நோக்கங்களின் அடைதல்

1975 இன் 13 ஆம் இலக்க, அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி அதிகாரச்சட்டத்தின் 2(2) ஆம் பிரிவின் பிரகாரம், அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நிதிசார் மற்றும் ஏனைய உதவிகளினை வழங்குவதன் மூலம் விவசாயம், கைத்தொழில் மற்றும் வீடமைப்பு அபிவிருத்தியில் உதவுவது வங்கியின் பிரதான நோக்கமாகக் காணப்பட்டது. அதற்கமைய, 2016 திசெம்பர் 31 இல் உள்ளபடியான இலங்கை மத்திய வங்கிக்கு வழங்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் ஒவ்வொரு துறைக்கும் வழங்கப்பட்ட நிதிசார் உதவிகளின் விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| துறை | மொத்த உதவிகளின் பெறுமதி |
|---|---|
| | ரூபா. 000” |
| விவசாயம் மற்றும் மீன்பிடி | 3,586,627 |
| சுற்றுலா | 40,344 |
| நிர்மாணம் | 24,906,652 |
| மொத்தம் | 28,533,623 |

சட்டரீதியான தேவைப்பாடுகளுடன் இணங்கும் பொருட்டு விவசாயம் மற்றும் வீடமைப்பு கடன்களாக அதன் கடன்களின் 99.9 சதவீதத்தினை வங்கி வழங்கியிருந்தது.

### 4.1.2 செயற்பாடற்ற கடன்கள் (என்பிஎல்)

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கிடைக்கப்பெற்ற தகவலின் பிரகாரம், 2016 திசெம்பர் 31 இல் உள்ளபடியான மொத்த வருமதியான கடன்கள் ரூபா 28,530 மில்லியனாகக் காணப்பட்டதுடன், அவற்றில் ரூபா 7,815 மில்லியன் தொகையொன்று செயற்பாடற்ற கடன்களாக இனங்காணப்பட்டதுடன் மொத்த வருமதியான கடன்களில் அது 27 சதவீதத்தினை பிரதிநித்துவப்படுத்துகின்றது.

(ஆ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளபடியான பாரிய எட்டு செயற்பாடற்ற கடன்களின் பெறுமதி ரூபா 48,462,023 ஆகக் காணப்பட்டதுடன் இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் கூட மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இந்த 8 செயற்பாடற்ற கடன்களிலிருந்து 2016 ஆம் ஆண்டின் போது எவ்வித தவணை வைப்புகளும் அறவிடப்பட்டிருக்காததுடன் முறையே ரூபா 33,302,506 மற்றும் ரூபா 2,693,389 பெறுமதியான இரண்டு கடன் கோவைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2016 திசெம்பர் 31 வரையிலும் ரூபா 33,302,506 செயற்பாடற்ற கடன்களினை அறவிடும் பொருட்டு கடன்பட்டோர்க்கு எதிராக வங்கி எவ்வித சட்டரீதியான நடவடிக்கைகளையும் எடுத்திருக்கவில்லை.

### 4.1.3 வங்கியின் கடன் தொகுதி

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2016 ஆம் ஆண்டின் போது பல்வேறு வகையான கடன்கள் மற்றும் முற்பணங்கள் அளிக்கப்பட்ட விபரம் பின்வருமாறு.

| கடன்களின் வகைகள் | 2016 | | 2015 | | முரண் {சதவீதம்/(பாதகம்)} |
|---|---|---|---|---|---|
| | வழங்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை | பெறுமதி | வழங்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை | பெறுமதி | பெறுமதி |
| | | ரூபா. மில்லியன் | | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| அடகுக் கடன்கள் | 1846 | 2,018 | 1916 | 1,874 | 144 |
| ஈபீஎவ் கடன்கள் | 6238 | 1,824 | 8031 | 2,451 | (627) |
| தனிநபர் கடன்கள் | 6018 | 4,441 | 5608 | 3,503 | 938 |
| மீள்நிதியிடல் கடன்கள் | 0 | 0 | 1 | 1 | (1) |
| ஏனைய கடன்கள் | 60 | 4 | 0 | 0 | 4 |
| | 14,162 | 8,287 | 15,556 | 7,829 | 458 |

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் அளிக்கப்பட்ட கடன்களின் மொத்த பெறுமதி 6 சதவீதத்தினால் அதிகரித்திருந்த போதிலும், அளிக்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை 9 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது.

### 4.1.4 வருமதியாகவுள்ள கடன்களின் அறவீடு

கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவலின் பிரகாரம், 2016 திசெம்பர் 31 இல் உள்ளபடியான அறவிடப்படாது காணப்படுகின்ற 12 மாதங்களினை மிகைத்த கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 4,009 மில்லியனாகக் காணப்படுகின்றது. அவற்றில், ரூபா 3,904 மில்லியன் ஈட்டுக் கடன்களினையும் ஊழியர் சேமலாப நிதி கடன்களினையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது.

### 4.2 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல்வாங்கல்கள்

2016 ஏப்ரல் 29 ஆந் திகதிய பிஈடி 03/2016 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களத்தின் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு முரணாக தொடர்புடைய ஊழியர்களின் சம்பளங்களிலிருந்து அது கழிக்கப்படாது அதன் ஊழியர்கள் தொடர்பில் ரூபா 21,035,164 தொகையான உழைக்கும் போதே செலுத்தும் வரி (PAYE) வங்கியினால் செலுத்தப்பட்டிருந்தது.

### 4.3 மனித வளங்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வங்கியின் பதவியிணியினர் நிலைமையின் பிரகாரம், 2016 திசெம்பர் 31 இல் உள்ளபடியான அங்கீகாரிக்கப்பட்ட பதவியிணியனர் மற்றும் உள்ளபடியான பதவியிணியினர் முறையே 523 மற்றும் 375 ஆகக் காணப்பட்டமையினால் அந்தத் திகதியில் வெற்றிடங்களின் எண்ணிக்கை 148 ஆகக் காணப்பட்டது. எவ்வாறாயினும், மொத்த வெற்றிடங்களில், 2016 திசெம்பர் 31 இல் உள்ளபடியான 76 பதவிகள் ஒப்பந்த அடிப்படை ஊழியர்களினால் நிரப்பப்பட்டிருந்தது.

(ஆ) வங்கியின் சுமூகமான செயற்பாடுகளில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய மேற்குறித்த வெற்றிட நிலைமைகளில் இரண்டு பிரதி பொது முகாமையாளர்கள் மற்றும் நான்கு பிரதம முகாமையாளர்கள் உள்ளடக்கப்பட்டிருந்தனர்.

### 4.4 முகாமைத்துவப் நடவடிக்கைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தன்னியக்க எஸ்எம்எஸ் வசதிகள், சந்தை இடர் மதிப்பீட்டு கையேட்டின் அறிமுகம், தரமான வர்த்தக தொலைக்காட்சியினை வழங்குதல், வாடிக்கையாளர்களின் ஆவணங்களினை மீள் வடிவமைத்தல் ஏனையவை போன்ற ஒன்பது நிகழ்ச்சித்திட்டங்கள் மீளாய்வாண்டிற்கான சந்தைப்படுத்தல் திட்டத்தில் அமைக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 21 நிகழ்ச்சித்திட்டங்களுக்கு ரூபா 17.5 மில்லியன் தொகையொன்று ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும், 2016 ஆம் ஆண்டின் இறுதியில் இந்த நிகழ்ச்சித்திட்டங்கள் ஆரம்பக் கட்டத்தில் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. மேலும், மீளாய்வாண்டின் போது அமுல்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட ஒவ்வொரு நிகழ்ச்சித்திட்டங்களுக்குமான விபரமான பாதீடொன்று வங்கியின் சந்தைப்படுத்தல் பிரிவினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

2016 ஆம் ஆண்டிற்கான பாதீட்டை வங்கி மீளமைத்திருந்த போதிலும், கடன்களின் மீதான வட்டி வருமானம் மற்றும் அலுவலர்களின் கல்வி மற்றும் பயிற்சிக்கான செலவினங்கள் தொடர்பில் மீளமைக்கப்பட்ட பாதீடு மற்றும் உண்மையான பெறுமதிகளுக்கும் இடையே குறிப்பிடத்தக்களவு முரண்கள் அவதானிக்கப்பட்டமையால், பாதீடானது ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதை சுட்டிக்காட்டுகின்றது.

### 5.2 உள்ளகக் கணக்காய்வு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உள்ளகக் கணக்காய்வு பிரிவின் அங்கீகரிக்கப்பட்ட பதவியிணியினர் ஐந்து ஊழியர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட போதிலும், வங்கியின் முதலீடுகள், கடன் அறவீடுகள், கிளை செயற்பாடுகள், ஏனையவை போன்ற உள்ளகக் கட்டுப்பாட்டின் முக்கிய பரப்புக்களினை மேவுகை செய்வதற்கு போதுமையற்றதாகக் காணப்படுகின்றது.

(ஆ) 2016 சனவரி 01 இலிருந்து வங்கியின் பிரதான உள்ளகக் கணக்காய்வாளரின் பதவி தொடர்ந்தும் வெற்றிடமாகக் காணப்பட்டது. எவ்வாறாயினும், 2017 ஒக்தோபர் 31 வரையிலும் இந்த வெற்றிடத்தை நிரப்புவதற்கு பயனுள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் காலத்திற்கு காலம் வங்கியின் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

| கட்டுப்பாட்டு பரப்புக்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| சந்தைப் பங்கின் பேணுகை | அதிகரித்துக் கொண்டிருக்கின்ற போட்டியுடைய வங்கியியல் தொழில்துறைக்கிடையில் அதன் சந்தைப் பங்கு நிலைமையினை உயர்த்துவதற்கு அல்லது பேணுவதற்கு திட்டமொன்றினை வங்கி கொண்டிருக்க வேண்டுமாகையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சந்தைப் பங்கின் வளர்ச்சி அவதானிக்கப்படவில்லை. |
| கடன்கள் மற்றும் வைப்புக்களின் கணக்கீடு | நிதிக்கூற்றுக்கள் மற்றும் தொடர்புடைய பதிவுகளில் காட்டப்பட்ட கடன் மற்றும் வைப்பு மீதிகளுக்கிடையே குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன. எனவே இந்த வித்தியாசங்களினை குறைக்க வங்கி போதுமான நடவடிக்கைகளினை எடுக்க வேண்டும். |